# விடியல்

*மாத இதழ், பொழுது – 19*

ஆவணி – புரட்டாசி

செப்டம்பர் – 2010

*vidiyalmagazhine.blogspot.com*

*vidiyalmagazhine@gmail.com*



*சிறப்பாசிரியர்*
**முனைவர் நா. கண்ணன்**
கல்லூரி முதல்வர்

*ஆசிரியர்*
**முனைவர் மா. கார்த்திகேயன்**
தமிழ்த்துறைத் தலைவர்

*இணை ஆசிரியர்*
**திரு. ப. சரவணன்**
தமிழ் விரிவுரையாளர்

*ஆசிரியர் குழு*
தமிழ் விரிவுரையாளர்கள்
அனைவரும்



**வெளியீடு:**

KSR COLLEGE OF ARTS AND SCIENCE INDIA


# உள்ளடக்கம்


- *கவிதைகள்*
  - *அன்னை* 02
- *சிறுகதை*
  - *நட்பு* 02
- *சிறப்புக் கவியரங்கம்*
  - *சுதந்திர இந்தியாவின் சாதனைகளும் வேதனைகளும்* 04
- *கட்டுரைகள்*
  - *மகளிர் விழிப்புணர்வு* 04
  - *இளையோரின் சமுதாயப் பற்று* 08
  - *பூமியின் வெப்பம்* 11
- *தெரிந்த இடம் தெரியாத செய்திகள்*
  - *பிரமிட்* 07
- *சிந்தனைக் கதை*
  - *ஞானியின் மனம்* 14
- *தொடர்கட்டுரை*
  - *மக்கள் தலைவர் கே.எஸ்.ஆர்.* 17
- *தெரிந்த முகம் தெரியாத செய்திகள்*
  - *பிளெமிங்* 19
- *தொடர் செய்யுள்* *(பகுதி - 2)*
  - *கே.எஸ்.ஆர். பிள்ளைத் தமிழ்* 20



**தமிழ்த்துறை,**
**கே.எஸ்.ஆர். கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)**
**திருச்செங்கோடு – 637 215, தமிழ்நாடு, இந்தியா.**
*www.ksrcasthamizh.blogspot.com, www.ksrcas.net.*

க வி தை

# ❄ அன்னை ❄

டி. தீபா
இளங்கலை ஆங்கில இலக்கியம் முதலாண்டு
கே.எஸ்.ஆர். கலை அறிவியல் மகளிர் கல்லூரி

*"ஈறைந்து மாதங்கள் என்னைச்*
*சுமந்தாய் கருவறையில் !*
*கருவறையில் நான் பலமுறை உன்னை*
*உதைத்தப் போதும் நீ*
*பொறுத்துக் கொண்டாய்!*
*தெய்வத்தாயே ! நீ என்னைச் சிப்பியிலிருந்து*
*வெளிவரும் முத்துப்போல பெற்றெடுத்தாய்!*
*வெண்ணிலாவைக் காட்டி நீ உண்ணாமல் கூட*
*எனக்கு அன்னம் ஊட்டினாய் !*
*குழந்தையாய்த் தவழ்ந்து கொண்டிருந்த*
*எனக்குக் கைவிரல் பிடித்து*
*நடையைப் பழக்கினாய்!*
*நான் வளர்ந்த பின்னர் உலகில் எப்படி*
*இருக்கவேண்டும் என்று காட்டி என்னை*
*ஓர் உயர்ந்த நிலைக்கு ஏற்றியதாயே!*
*என் உயிர் பிரிந்தாலும் உன்னைப்*
*பிரியாத வரம் வேண்டும்!*
*மீண்டும் குழந்தையாக உன்*
*கருவறையில் பிறக்க வேண்டும்!*
*என்று இறைவனிடம்*
*பிரார்த்தனை செய்கிறேன் அன்னையே!*
*எல்லாம் உனக்காக!"*

◉

சி று க தை

# ❄ நட்பு ❄

ப. கோமதி
இளங்கலை வணிகவியல் (கணினி
பயன்பாடு) முதலாண்டு 'இ' பிரிவு.

ஏண்டி எரும, உங்கிட்ட எத்தனைத் தடவெச் சொல்லிருக்கேன் அந்தக் கழிசடையோடப் பேசக்கூடாதுனு!

மாப்பிள்ளை இதைப் பார்த்தா என்ன நினைப்பார்? பிரண்டு அது, இதுங்கறது எல்லாம் கல்யாணத்திற்கு முன்னால் சரி. அதுக்கப்புறமும் இப்படி இருந்தேனா என்ன அர்த்தம்.?

அம்மா இப்ப என்னப் பண்ணிட்டேனு இப்படி தாண்டுற?

ஒரு ஆம்பளையோட பேசக்கூடாதுனா என்ன இது முட்டாள் தனமா இருக்கு?

ஏய் தலை தீபாவளிக்கு வந்திருக்கே! மதிப்பும் மரியாதையா பிறந்த வீட்டோட மானத்தைக் காப்பாத்திட்டுப் போடீ செல்லம், நீ எப்படி ஆம்பளைங்களோடப் பேசறதைப் பார்த்தா மாப்பிள்ளை இப்படித்தான் பிள்ளை வளர்க்கறதானு கேட்டா நம்மக் குடும்ப கவுரவம் என்னாவரது? யோசிச்சுப் பாரடீ?

அம்மா! நான் அவரோட ஒரு வருசமாய்க் குடும்பம் நடத்துறேன். அவரு என்ன நெனைப்பார்னு கூடவாத் தெரியாம போயிடும்? நீ போமா! சிவாவோட இன்னுங் கொஞ்ச நேரம் பேசிட்டிருந்திட்டு வர்றேன்.

அதுக்கில்ல டீ கண்ணு, ஊர்ல நாலு பேரு நாலு விதமாப் பேசுவாங்கடீ, அங்கப் பாரு நீயும் சிவாவும் பேசிட்டு இருக்கறதைப் பக்கத்துத் தெரு மாமி பார்த்திட்டு இருக்காங்க, குடும்ப மானம் கப்பல் ஏறுது! வாடீ போகலாம்.

அம்மா! இதுக்குமேல என்னாவது பேசிட்டிருந்தேனா என்ன பண்ணுவேன்னேத் தெரியாது போயிடு.

வேண்டாம் கலா என்னால அம்மாவுக்கும் மகளுக்கும் தகறாறு வேண்டாம். நான் போயிடுறேன். நில்லு சிவா! ஒரு அடி எடுத்து வச்சேன்னா என்னை உயிரோடவேப் பார்க்க முடியாது.

ஓ கோ! உனக்கு அவ்வளவு திமிர் ஆயிப்போச்சா! பேசுடீயம்மா, பேசு, நல்லாப் பேசு! விடிய, விடியப் பேசு, அவனோடவே கும்மாளம் அடிச்சுட்டு வா!

அம்மா! என்ன வார்த்தை சொல்லிவிட்டே! சிவாவோட கும்மாளம் அடிச்சுட்டுவான்னா சொன்னே, எப்படிம்மா உன்னால இப்படிப் பேச முடியுது? சிவா நம்ம குடும்பத்துல ஒருத்தனாவல்ல இருந்தான். ஒரு அண்ணமாதிரியானவனப் போயி..... சீ! போமா!

உன்ன அம்மானு சொல்லவே வெக்கமா இருக்கு.

சிவா! என்னால நீ அவமானப்படுறதை கொஞ்சங்கூட தாங்க முடியாது, நட்புன்னா என்னானுத் தெரியாத ஜடத்துக்கிட்டே போயி விளக்குறது வீண். ஸாரி சிவா நீ போயிடு. இந்தப் பாழாய்ப் போன உலகத்துக்கு நட்பு எது? காமம் எதுனு தெரியறதுக்கும் இன்னும் எத்தனை வருசம் ஆகப் போகுதோ தெரியலே!

(திடீரென்று அங்கு குறுக்கிட்ட கலாவின் கணவன்) சிவா! கொஞ்சம் நில்லுங்க! கலாவோட அம்மா ஏதோ தெரியாமச் சொல்லிட்டாங்க. நட்புன்னா என்னானுத் தெரியாத பாவியல்ல நானு, நீங்க கலாவோடப் பேசறது நான் தப்பா நெனைக்கவே மாட்டேன். நீங்க கலாவைக் கூட்டிட்டுப் போய் வீட்ல பேசிட்டிருங்க. நான் கடைத் தெருவுக்குப் போயிட்டு அப்புறமா உங்க வீட்டுக்கு வந்து கலாவைக் அழைச்சிட்டுப் போறேன் சரியா? என்றதும், கலாவின் அம்மா மாப்பிளே நீங்க த.....ப்....பா நெனைச்சுக்குவீங்கனு தான் நான் கலாவைக் கொஞ்சம் ஆதங்கப்படுற மாதிரி திட்டிட்டேன்.

நீங்க என்ன சொல்ல வரீங்கன்னு தெரியுதுங்க அத்தை! உங்க பக்கத்து வீட்டு பார்வதியோட மகள், கல்யாணம் பண்ணிட்டு ஆடி நோம்பிக்கு வந்தப்ப, அவளோட சிநேகிதங்கிட்டே பேசினதைப் பார்த்த அவளோட கணவன் தப்பா நெனைச்சுக்கிட்டு பொண்டாட்டியே வேணாம்னு சொன்ன மாதிரி நானும் சொல்லிடுவேண்ணுதானே நெனைக்கிறீங்க?

உங்களுக்கு அது எப்படி ......?

எப்படியோ அது தெரியும்னு வெச்சிக்குங்க, அந்த முட்டாள் மாதிரியே, எல்லோரும் இருப்பாங்களா என்ன? நீங்கதான் இப்படி சொல்றீங்க, அங்க எங்க ஊர்ல நான் இல்லேனா

என்னோட நண்பனுங்கதான் கலாவுக்கு வேண்டிய உதவி செஞ்சு கொடுத்திட்டு நான் வர்ற வரைக்கும் கலாவுக்குப் பாதுகாப்பா இருப்பானுங்க! நட்பைத் தவறாக நினைக்காதீங்க அத்தை!

மருமகனே! நீங்க இவ்ளோ நல்லவரா இருக்கறதுக்கு எங்க கலா ரொம்பவே கொடுத்து வெச்சிருக்கனும் போங்க!

இல்லை, இல்லை! கலா மாதிரி தங்கமானப் பொண்ணு கிடைக்க நான்தான் கொடுத்து வச்சிருக்கணும்.

மருமகனே இந்த காலத்துல தங்கச்சிங்க கூடப் பேசினாலே தப்பா நெனைக்கிறாங்க, இந்த அழுக்கான சமுதாயத்திற்கு மத்தியிலே உண்மையாளுமே நீங்க ஒரு "தெய்வமுங்க".

◉

## சுதந்திர தின சிறப்புக் கவியரங்கம்

இந்திய தேசிய சுதந்திர தினத்தன்று கே.எஸ்.ஆர். சமுதாய வானொலியில் (90.4 அலைவரிசை) மாணாக்கர்களது சிறப்புக் கவியரங்கம் "சுதந்திர இந்தியாவின் சாதனைகளும் வேதனைகளும்" என்ற பொருண்மையில் ஒளிபரப்பானது.

இதில், ஆறு மாணாக்கர்கள் 'சுதந்திர இந்தியாவின் சாதனைகள்' என்ற தலைப்பிலும் மூன்று மாணாக்கர்கள் 'சுதந்திர இந்தியாவின் வேதனைகள்' என்ற தலைப்பிலும் கவிதை வாசித்தனர்.

இதனைத் தமிழ்த்துறைத்தலைவர் முனைவர் மா. கார்த்திகேயன் ஒருங்கிணைத்தார். கவியரங்கம் பற்றிய கருத்துரையினைத் தமிழ்த்துறை விரிவுரையாளர்கள் திரு. ப. சரவணன் மற்றும் முனைவர் த. கண்ணன் ஆகியோர் வழங்கினர்.

◉

கட்டுரை

# ❄மகளிர் விழிப்புணர்வு ❄

**ப. தமிழரசி**
**இளங்கலை ஆங்கில இலக்கியம் முதலாண்டு**
**கே.எஸ்.ஆர். கலை அறிவியல் மகளிர் கல்லூரி**

***(சமுதாயத்தின் மகளிர் நிலை குறித்து எங்கள் ஊரில் இருவர் பேசிக்கொண்ட உரையாடலில் கிட்டிய குறிப்புக்களைக் கொண்டு தயாரித்த கட்டுரை)***



இன்றைய காலகட்டத்தில் பெண்களுடைய நிலை மிகவும் மாறியுள்ளது. பெண்கள் என்பவர்கள் நான்கு சுவற்றுக்குள்ளேயே இருக்க வேண்டும் என்ற நிலை மாறி வெளியே சென்று கல்வி கற்கிறார்கள். ஒரு தாய்தான் குழந்தைகளுடைய முதல் ஆசிரியை. ஓர் ஆண் கல்வி கற்றால், தனி மனிதன் ஒருவன்தான் அறிந்து கொள்ள முடியும். அதுவே, ஒரு பெண் கல்வி கற்றால் ஒரு குடும்பமே அனைத்து விஷயங்களையும் அறிந்து கொள்ள முடியும்.

## மகளிர் முன்னேற்றம்

இன்றைய சமுதாயத்தில் பெண்கள் முன்னேற்றம் கண்டிருக்கிறார்கள். மகளிர் அணுக முடியாது என்று கருதிய துறைகளில் எல்லாம் சாதனை புரிகின்றனர். சான்றாய், அவர்கள் ஆட்டோ, பேருந்து, பொதி உந்து

வண்டி, விமானம் ஆகியவற்றின் ஓட்டுநர்களாய்த் திகழ்கின்றனர். விளை யாட்டுத் துறையில் தங்கம் குவித்து நாட்டுக்குப் பெருமை தேடித் தந்துள்ளனர். எனினும், இத்தகைய ஆற்றல் பெற்றப் பெண்களுக்குச் சமுதாயத்தில் பாதுகாப்பும் சட்டத்தின் துணையும் இருக்கின்றனவா என்று ஆராய வேண்டும்.

## இந்தியச் சட்டத்தில் மகளிர் நிலை

"இந்து வாரிசுச் சட்டப்படி" பெண்களுக்குப் பெற்றோர் சொத்தில் உரிமை இருக்கிறது. வரதட்சணை தடுப்புச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. ஆண்களைப் போன்று பெண்களுக்கும் கல்வி, வேலை முதலியவற்றில் சம உரிமை இருக்கின்றது. ஆனால், அதைப்பற்றிய விழிப்புணர்வு பெண்களிடம் இருத்தல் வேண்டும். சொத்துரிமைக்காகச் சகோதரர் சண்டை போட்டுக் கொண்டால் ஏற்கும் சமுதாயம் பெண் சொத்துரிமை கேட்டால் கேவலமாய்ப் பார்க்கிறது.

## அக்காலத்தில் மகளிரின் நிலை

அந்தக் காலத்தில் மகளிருக்கு மிகவும் மரியாதை இருந்தது. சிலப் பெண்களைக் கடவுளாகவும் மதித்து வணங்கினார்கள். முன்மாதிரியாகக் கருதப் பட்ட மகளிருள் சிலர் சாவித்ரி, சீதா, தமையந்தி, நளாயினி போன்றோர் மிகவும் சிறந்த வாழ்க்கை வாழ்ந்தார்கள். ஜான்சி நாட்டைச் சார்ந்த ராணி லஷ்மி அவர்கள் இந்த நாட்டையே ஆண்டார்கள்.

## நவீனப் பெண்

நான் பெண்களைக் கண்டு மிகவும் பெருமிதம் கொள்கிறேன். காரணம், கல்பனாச் சாவ்லா விண்வெளிக்குச் சென்று பல சாதனைகளைப் புரிந்துள் ளனர். இன்றைய காலத்தில் இந்திரா காந்தி, சோனியா காந்தி போன்றவர்களைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறேன். அவர்களுக்குக் கல்வி என்பது ஒரு வரப்பிரசாதமாக அமைகிறது.

## பெண்களின் நிலைமை

எந்த நிலையிலும் பெண் ஒருத்தி தன்காலில் நிற்கத் துணிவும் பழக்கமும் கொள்ள வேண்டும். பெண்ணின் கொத்தடிமை நீங்க விழிப்புணர்வு தேவை. ஆணாதிக்கச் சமுதாயத் திலிருந்து அவள் விடுபட விழைந்தாலும் தன்னுரிமையைக் கேட்க அஞ்சுகிறாள். நீதி மன்றத்துக்குப் போவதைக் கேவலமாய்க் கருதுகிறார்கள். பெண் ணிற்குத் தன் உரிமையை வற்புறுத்திக் கேட்கும் துணிவு இன்னம் வரவில்லை. நயமாய், மென்மையாகவே கேட்டுப் பெற முயல்கிறாள். மென்மை பெண்மைக் குரிய பண்பாயிற்றே!

## தொழிற்சாலைச் சட்டம்

தொழிற்சாலைச் சட்டத்தின்படி பெண்களுக்குப் பேறுகாலச் சலுகைகள் உள்ளன. எனினும், அந்தச் சலுகை களை அவர்களால் சரியாகப் பெற முடியவில்லை. நிருவாகத்தினரை எதிர்த்து அவர்களால் குரல் கொடுக்க முடியவில்லை. அவர்கள் குரல் ஒடுங்கி அடங்கிப் போகிறது. அதற்குக் காரணம் ஆணாதிக்கமே ஆகும்.

## பெண்களின் சாதனை

பெண் கொத்தனார்கள், வேலூரில் நகராட்சி மையத்தினைக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். மனிதவள மேம் பாட்டுக் கழகத்தின் வாயிலாய்

அவர்களுக்குப் பயிற்சியும் கொடுக்கிறார்கள். ஆனால், துணிந்து அவர்களிடம் பொறுப்புக்களை ஒப்படைப்பதில்லை. காரணம் அதனைக் கற்றுக் கொடுப்பவர் ஓர் ஆண் என்பதால் தான்.

## எல்லாத் துறையிலும் மகளிர்

இந்தக் காலகட்டத்தில் மகளிரின் எண்ணிக்கை 50 சதவிகிதமாக உள்ளது. மகளிர் இராணுவத்திலும் வேலை செய்யத் தொடங்கிவிட்டார்கள். நாம் நாட்டினில் மகளிரைப் பலதுறைகளில் காணலாம். சான்றாகக் கலை, அறிவியல், விளையாட்டு, நிர்வாகம், அரசியல், தொழிற்துறை போன்றவற்றைக் கூறலாம். பெண்கள் ஆண்களை விடப் பலமடங்கு உயர்ந்தவர்கள் என்பதை அறியலாம். எடுத்துக்காட்டாக அழகு, கவர்ச்சி, சகிப்புத்தன்மை மற்றும் அவர்களுடைய பொறுமை.

இந்திய நாட்டில் பெண்களுக்குச் சம உரிமை வழங்கப்பட வேண்டும். ஆனால் இன்னும் நம்நாட்டில் ஆணாதிக்கச் சூழலே நிலவுகிறது. இளம் பெண் குழந்தையின் பிறப்பை இந்தச் சமுதாயம் ஒரு பாரமாகக் கருதுகிறது. இன்னும் கிராமப்புறங்களில் உள்ள மக்கள் விழிப்புணர்வு பெறவில்லை. இளம் பெண் குழந்தையின் மரணம் நம் நாட்டின் கிராமப்புறங்களில் சாதாரணமாக நடந்து வருகின்றது. ஒவ்வொரு ஆணிற்குப் பின்னால் ஒரு பெண் இருக்கிறாள் என்று பல்வேறு மக்கள் கூறியுள்ளனர். பெண்களுடைய முக்கியத்துவத்தை இந்தச் சமுதாயம் உணர வேண்டும்.

## பெண்களின் கல்வித் தகுதி

ஒரு பெண் கல்விகற்றால் அது ஒரு குடும்பமே கல்வி கற்பது போல். கிராமப் புறங்களிலும் கூடப் பெண்களுடைய கல்வித் தகுதி மேம்பட வேண்டும். அவர்கள் தங்கள் பெண் குழந்தைகளைக் கல்லூரிக்கு அனுப்ப வேண்டும். அவர்களுடைய பெண்கள் எல்லாத் துறைகளிலும் முதன்மை பெற்று விளங்க வேண்டும் என்று கருத வேண்டும். கல்வித் தகுதியே பெண்ணை மேம்படுத்த உதவும் சிறந்த கருவியாகும்.

“பெண்கள் எந்த வேலைக்கும் பயன்படாதவர்களல்ல, அவர்கள் எந்த வேலைகளிலும் பயன்படுத்துவதில்லை” உலகத்தில் உள்ள அதிசயங்களில் பெண்களும் ஓர் அதிசயமாகக் கருத வேண்டும்.

## நம்நாட்டில் பெண்கள் நிலை:

காவல் துறையில் ஆடவரும் பெண்டிரும் பணியாற்றுகின்றனர். அவர்களுள் பெண்டிரைப் “பெண் போலீஸ்” என்று கூறுகிறார்கள். ஆடவரை ஆண் போலீஸ் என்று கூறுவதில்லை. பள்ளிக் கூடப் பாட நூல்களிலும் “அம்மா சமையல் செய்கிறாள், அப்பா செய்தித்தாள் படிக்கிறார் அக்கா தம்பிப் பாப்பாவைத் தூக்கி வைத்துள்ளாள்” என்று குறிப்பிடுகின்றனர். பெண்களுக்குச் சமையலறையும் குழந்தை வளர்ப்புமே பணி என்று முத்திரை குத்திவிடுகிறார்கள். அதுமட்டுமின்றி “தீண்டாமை” என்னும் செயல் நம்


நாட்டில் மிகவும் பரவியுள்ளது. "தீண்டாமை ஒரு பாவச் செயல்" தீண்டாமை ஒரு பெருங்குற்றம், தீண்டாமை மனிதத் தன்மையற்றச் செயல்" என்று தமிழ் நாட்டுப் பாடநூல் கழகம் வெளியிடும் எல்லாப் பாடநூல்களின் முதல் பக்கத்தில் இருக்கிறது. அதனை நடைமுறைப் படுத்த அனைவரும் பாடுபட வேண்டும்.

விழிப்புணர்வுச் சிந்தனைகள் இன்று மகளிருக்குள் நெருப்புப் பிழம்பாய்க் கொழுந்து விட்டு எரிகின்றன. இதனைச் சமுதாயம் நன்கு உணர்ந்து பொறுப்புணர்வுடன் செயல்பட்டால் பெண்மை பெருமை பெறும். ஆண்மை நலம் பெறும்.

◉

**தெரிந்த இடம், தெரியாத செய்திகள்**

# ❄ பிரமிட் ❄




கிசாவின் பெரிய பிரமிட், உலக அதிசயங்கள் ஏழுனுள் ஒன்றாகும். இதுவே உலகின் மிகப் பெரிய, பிரபலமான பிரமிட்டுமாகும். இது 4ஆவது வம்ச எகிப்திய பாரோ கூபுவின் சமாதியாகும். இது கட்டிமுடிக்கப்பட்டது, கிமு 2570 என்று கணக்கிடப்பட்டுள்ளது.

நவீன எகிப்தின் தலைநகரமான கெய்ரோவின் (கெய்ரோ எகிப்து நாட்டின் தலைநகரம் மற்றும் நாட்டின் மிகப்பெரிய நகரம் ஆகும். இந்நகரம் நைல் ஆற்றின் கரையில் அமைந் துள்ளது. இங்கு 15 மில்லியன் மக்கள் வசிக்கின்றனர்) புறநகர்ப் பகுதியிலுள்ள, பண்டைய கிசா நெக்ரோபோலிசில் அமைந்துள்ள மூன்று பெரும் பிரமிட்டுகளில் பெரியதும், காலத்தால் முந்தியதும் இதுவே.

பெரிய பிரமிட் 137 மீட்டர்கள் (481 அடி) உயரமும், ஒரு பக்கம் 235 மீட்டர்கள் (775 அடிகள்) கொண்ட சதுர வடிவ அடிப்பகுதி 5.5 ஹெக்டேயர்கள் (13.5 ஏக்கர்கள்) பரப்பளவையும் கொண்டுள்ளது. 4000 ஆண்டுகளுக்கு மேலாக மனிதனால் கட்டப்பட்ட, உலகின் மிக உயந்த அமைப்பாக இருந்துவந்தது. 1439ல் 143 மீட்டர்கள் உயரமான ஸ்ட்ராஸ்பர்க்கின் மின்ஸ்டர் இந்த இடத்தைப் பிடித்துக்கொண்டது. இதன் சதுரவடிவ அடிப்பகுதியின் நான்குப் பக்கங்களுக்குமிடையேயான நீள வழு 0.6 அங்குலங்கள் மட்டுமே என்பதும், கோணங்கள் சரியான சதுர அமைப்பிலிருந்து 12 செக்கண்ட் அளவே விலகியிருப்பதுவும், கட்டுமான வேலையின் துல்லியத்தைக் காட்டு கிறது.

இதன் சதுரவடிவப் பக்கங்கள் பெருமளவுக்கு அச்சொட்டாக கிழக்கு-மேற்கு, வடக்கு-தெற்குத் திசைகளில் அமைந்துள்ளன. சரிந்த முகங்கள் 51 பாகை 51 நிமிடக் கோணத்தில் சரிந்துள்ளன.

இதன் மொத்த நிறை 7 மில்லியன் டன்கள் எனவும், கன அளவு 2,600,600 கன மீட்டர்கள் எனவும் கணக்கிடப் பட்டுள்ளது. இதுவே எகிப் தியப் பிரமிட்டுக்களுள் மிகப் பெரியது. (மெக்சிக்கோவிலுள்ள சோலுலாவின் பெரிய பிரமிட் கன அளவில் இதைவிடப் பெரியது.)

- ப. **சரவணன்,**
**தமிழ் விரிவுரையாளர்.**

◉

க ட் டு ரை

# ❄இளையோரின் சமுதாயப் பற்று ❄

**இ. ரம்யா**
**இளங்கலை மூன்றாமாண்டு கணிதம்**

மக்கள் அனைவரும் ஒன்றுகூடி வாழ்கின்ற இயல்பினர் நாகரிகம் தோன்றாத அக்காலத்தே அவர்கள் தனித்து வாழ்ந்திருக்கலாம். ஆனால் இக்காலத்தில் ஒருவருடன் மற்றவர் சேர்ந்து வாழவேண்டிய நிலையில் தான் உள்ளனர். இங்ஙனம் ஒன்றுபட்டு வாழவேண்டிய நிலையில்தான் உள்ளனர். இளைஞர் ஆற்ற வேண்டிய தொண்டு யாது எனக் காண்போம்.

## இளமையில் பயிற்சி

மாணவர்களுக்குப் பல பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. ஆனால், நாளை அவர்கள் இக்குடியரசின் தலைவர்கள். எனவே, இன்றே அவர்களுக்குச் சமூகத் தொண்டு ஆற்றும் இயல்பு உண்டானால்தான், பிற்காலத்தே அது தழைத்து மலர்ச்சி பெற்று நிற்கும்.

இளமையில் பதிவது எதுவும் பசுமரத்தாணி அன்றோ?

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையா தன்றோ?

## பல இயக்கங்கள்:

மாணவர்களுக்கு இளமையிலேயே தொண்டுப் பயிற்சியை அளிப்பதற்கன்றே நாட்டில் பல இயக்கங்கள் தோன்றியுள்ளன. சாரணர் இயக்கம், தேசிய மாணவர் படை, செஞ்சிலுவைச் சங்கம், மாணவர் நாட்டு நலப்பணி இயக்கம் ஆகியவை குறிப்பிடத் தக்கவை.

இளைஞர் இத்தகைய இயக்கத்தில் சேர்ந்து பணி செய்து பழக வேண்டும். அந்தப் பணி செய்யும் போது அவர்கள் பிரதிபலனை எதிர்பார்க்கலாகாது.

“வழி இல்லாத ஊருக்கு வழி அமைத்தல், “ஊரைத் தூய்மை செய்தல்”, “தூய்மை பற்றி எடுத்துக் கூறி மக்களைத் திருத்துதல்”, “உடல் நலத்துடன் வாழ்வதற்குரிய வழிகளை எடுத்து மொழிதல்”, “விழாக்காலங்களில் கூட்டத்தை நெறிப்படுத்துதல்”, “ஊர்திகள் தக்க முறையில் செல்லச் செய்தல்” போன்ற பணிகள் இளைஞர் ஆற்றக் கூடியவை.

## கட்டாய இராணுவப் பயிற்சி:

எல்லா நாடுகளிலும் படை உண்டு. சில நாடுகளில் அதிக அளவிலும், சில நாடுகளில் குறைந்த அளவிலும் இருக்கலாம். ஆனால், படையை

வைத்துக் கொள்ளாத நாடு ஏதும் இருப்பதில்லை.

நாட்டில் எதிர்பாராத விதமாக ஒரு பெருந்துன்பம் ஏற்பட்டால் நாட்டைக் காக்கப் போதுமானதாகப் படை இருக்கமா? அதனால்தான் கட்டாய இராணுவப் பயிற்சி தேவையாகின்றன.

நம் நாட்டில் தேசிய இளைஞர் படை உள்ளது. இது இளைஞர்களுக்காகப் போர் பயிற்சி அளிக்கின்றது. ஆனால் இதில் எல்லா மாணவரும் பயிற்சி பெறுவதில்லை. விருப்பம் உள்ள மாணவர்களுக்கு மட்டுமே படைப்பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆதலால் இது போதுமானதன்று. உடல் நலம் கொண்ட மாணவர் அல்லது இளைஞர் அனைவருக்கும் படைப் பயிற்சியை அளிக்க வேண்டும்.

### எல்லார்க்கும் இராணுவப் படைப் பயிற்சி :

பள்ளியில் பயிலாத இளைஞர்களுக்கு எப்படி இப்பயிற்சி அளிப்பது? மக்கள் தொகைக் கணக்கெடுப்பு எடுத்து, அதன் மூலம் பள்ளியில் அல்லது கல்லூரியில் பயிலாத இளைஞர் எவ்வளவு பேர் என்று அறிந்து கொள்ளலாம். அவர்களை வற்புறுத்தி இப்பயிற்சியை அளிக்க அரசு வழிவகைகளைக் காணவேண்டும். அவர்களுக்குத் தக்க வெகுமதி அளித்து ஊக்கமளிக்கலாம். வேறு பல வகைகளிலும் சலுகை அளிக்கலாம். பட்டங்கள் நற்சான்றிதழ்கள் வழங்கி ஊக்கப்படுத்தலாம்.

### இராணுவப் பயிற்சியால் ஏற்படும் பிற பயன்கள்:

போரில்லாச் சமயத்திலும் கூட அவர்கள் பல வழிகளிலும் உதவலாம். வெள்ளம், புயல், நிலநடுக்கம் முதலியவற்றினால் அழிவு ஏற்பட்டால் அவர்கள் மக்களுக்குச் சேவை செய்யலாம். நாட்டில் சாலை அமைத்தல், குளம் வெட்டுதல், செம்மையுறச் செய்தல் முதலிய வற்றிற்கும் படைப் பயிற்சி பெற்றவர் உதவலாம்.

நாட்டிற்கு இவ்வாறு உதவுதலேயன்றி, அவர்கள் தங்களுக்கும் உதவியாய் இருக்கலாம். உடல்வளம் கொண்டவர் தம் வேலையைச் செவ்வையாய்ச் செய்தல் கூடும். நோயும் அவர்களை அணுகுவதில்லை. இதைவிட வேறு செல்வம் ஏது?

### தொண்டாற்றும் பண்பு:

இளைஞர் கல்வியைக் கற்றல் மட்டும் போதுமானதன்று. "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்பது நாவுக்கரசர் வாக்கு. இந்த மனப்பான்மையை குறிக்கோளை இளைஞர் பெற வேண்டும். உள்ளத்தாலும் உடலாலும் பிறர்க்கு உதவ முன்வர வேண்டும்.

"தேசிய மாணவர் படை, சாரணர் படை முதலியன இளைஞர்களுக்காக ஏற்படுத்தப்பட்டவை. அவற்றிலுள்ள இளைஞர் கள் சாலை அமைத்தல், மரம் நடுதல், முதியோருக்குக் கல்வி புகட்டுதல், ஒழுக்க முறைகளைக் கற்பித்தல், உடல் பாதுகாப்பு முறைகளை எடுத்துக் கூறுதல், துப்புரவின்மையால் உண்டாகும்

தீமைகளை எடுத்துக்காட்டி நன்னெறிப் படுத்தல் முதலியவற்றைச் செய்யப் பார்க்கின்றோம். மற்ற மாணவரும் இம் முறைகளைப் பின்பற்றலாம். இதனால் சமூகம் திருத்துவது மட்டுமன்று மாணவர்க்கும் உள்ளம் பயன்படுகின்றது. சமூகப் பெருநோக்கு உண்டாகிறது.

எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறு ஒன்று அறியேன் என்ற உள்ளம் மாணவர்க்கு உண்டானால், உண்டாகும் நன்மையை உரைக்கவும் வேண்டுமோ? தொண்டர் தம் பெருமை சொல்லவும் கூடுமோ?

### செஞ்சிலுவைச் சங்க நியதிகள்:

செஞ்சிலுவைச் சங்கங்களைப் பற்றிச் சில நியதிகள் வகுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அவை, எப்போதும் நாடு-இன-மத-வேறுபாடு இன்றித் தொண்டு செய்ய வேண்டும். போர்க்களத்தில் இச்சங்கத்தின் இருக்கை நன்கு தெரியத்தக்க அடையாளங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். போரில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரும் இச்சங்கத்தைச் சார்ந்தவர்க்கோ, இச் சங்கத்தின் தொண்டிற்கோ எந்தவித ஊறும் செய்தல் கூடாது. கிளைச் சங்கங்களை ஜெனீவாவில் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்பனவாகும்.

### செஞ்சிலுவைச் சங்க நோக்கம்:

போரில் புண்படுவோரைப் பேணிக் காத்தல் போரில் சிறை செல்லப் படுவோரை மீட்டல், தப்பிப் போனவர்களைத் தேடுதலர், எக்காலத்தும் எல்லா மக்களுக்கும் மொழி-இன-நாட்டு வேறுபாடு காட்டாது தொண்டு புரிதல், அம்மை, பிளேக், கக்கல், கழிச்சல், போன்ற கொடிய தொற்றுநோய் ஏற்படும் காலங்களில் மக்களுக்குத் தொண் டாற்றுதல். மருத்துவ வசதி செய்தல், நலவழிகளைக் கைக்கொள்ளத் தூண்டுதல், புயல், வெள்ளம், நிலநடுக்கம் போன்ற இயற்கைச் சீற்றங்களினால் துன்பப்படுவோர்க்கு உதவி புரிதல் முதலியன செஞ் சிலுவைச் சங்கத்தின் நோக்கங் களாகும். சுருங்கக் கூறின் என் கடன் பணி செய்து கிடப்பதே என்னும் அப்பர் பெருமான் வாக்கே இச்சங்கத்தின் நோக்கமாகும்.

### அமைதிக் காலப் பணி:

இன்று செஞ்சிலுவைச் சங்கம் உலகம் எங்கும் பரவியுள்ளது. ஏறத்தாழ எழுபத்தைந்து நாடகளில் சிறப்போடு செயல்பட்டு வருகிறது. முதலில் போர்க் காலத்தில் தொண்டு செய்வதையே இச்சங்கம் நோக்கமாகக் கொண்டிருந்தது. நாளடைவில் அமைதிக் காலத்திலும் தொண்டு செய்யத் தொடங்கியது. உடல் நலத்துறை, நோய்த்தடுப்பு, விபத்தில் துன்புற்றோர்க்கு உதவி ஆகிய பணிகளை இளைஞர் மேற்கொண்டு செயல்பட்டு வருகிறது.

### ஒலிம்பிக் விளையாட்டு விழாவின் நோக்கம்:

நாகரிகத்துக்கும் பண்பாட்டுக்கும் பெயர் பெற்ற பழம்பெரும் கிரேக்க நாட்டின் வீரத்தை உலகுக்குப் பறைசாற்றும் உயர்ந்த குறிக்கோளுடன் இவ்விழா நடைபெற்று வருகிறது.

உலக நாடுகளில் விளையாட்டு வீரர்களுக்கிடையே நல்லெண்ணத்தையும், நேர்மையுணர்வையும், நட்புறவையும் நல்ல முறையில் வளர்க்க உதவுவதே. இவ்விளையாட்டுப் போட்டியின் நோக்க மாகும். இன்றைய நாளிலும் இதன் குறிக்கோள், விரைவு-உயர்வு-வலிமை என்பது தான்.

எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறு ஒன்றும் அறியேன் என்பார் தாயுமானவர். இந்த மனப்பான்மை இளைஞர்க்கு உண்டாதல் வேண்டும். அப்போது தான் அவர்கள் சிறந்த இளைஞர்கள் ஆவார்.

◉

கட்டுரை

# ❄ பூமியின் வெப்பம் ❄

**வி. சரவணக்குமார்**
**இளங்கலை கணினி பயன்பாட்டுத்துறை**
**இரண்டாமாண்டு 'அ' பிரிவு**



இந்தப் பூமியின் வெப்பம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இந்த வெப்பமானது என்று தணியும் என்று தெரியவில்லை. தற்போது இக்கட்டுரையின் மூலமாக பூமியின் வெப்ப உயர்வைப் பற்றியும், அதை எவ்வாறு கட்டுப்படுத்த வேண்டும் என்பதைப் பற்றியும் காணவிருக்கிறோம்.

## தணியாத இப்பூமியின் வெப்பம்

உலகலாவிய வெப்ப உயர்வு என்பது பூமியின் சராசரி வெப்ப அளவில் ஏற்படும் அதிகரிப்பைக் குறிக்கும். இதன் விளைவாய்த் தட்பவெப்ப நிலையில் மாறுதல்கள் ஏற்படும். தணியாத இப்பூமியின் வெப்பமானது நாளுக்க நாள் அதிகரித்த வண்ணம் உள்ளதே தவிர குறைந்தபாடில்லை என்பதே அனைவரும் அறிந்துள்ள உண்மை ஆகும்.

உலகளாவிய வெப்ப உயர்வு: புவியின் வரலாற்றில் கடந்த 4.65 பில்லியன் ஆண்டுகளில், பூமியின் வெப்பம் பலமுறை அதிகரித்துள்ளது. ஆனால் தற்சமயம் மனிதனின் செயல்பாடுகளால் வெப்ப அளவு கிடுகிடுவென உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது. உலகின் தற்போதைய சராசரி வெப்பநிலை 59 டிகிரி பாரன்ஹீட். கடந்த 100 ஆண்டுகளில் சராசரி வெப்பம் ஒரு டிகிரி பாரன்ஹீட் அதிகரித்து 2100 ஆம் ஆண்டுவாக்கில் வெப்பநிலை 2.5 டிகிரி பாரன்ஹீட் முதல் 10.4 டிகிரி பாரன்ஹீட் வரை அதிகரிக்கும் எனக் கணக்கிடப பட்டுள்ளது.

இதன் விளைவாக அதிரடி மாற்றங்களான கடல்மட்ட அளவு உயர்வு, மழை பொழிவுகளில் மாற்றம், தாவரங்கள், விலங்குகள் மற்றும் மனிதர்களில் வெவ்வேறு வகையான தாக்க மாற்றங்கள் ஏற்படலாம்.

## கண்ணாடி வீடு வாயுக்கள்:

இந்த உலக வெப்ப உயர்வுக்கு முக்கிய காரணமாக விளங்கக் கூடியது கண்ணாடி வீடு வாயுக்கள் ஆகும்.

## கண்ணாடி வீடு விளைவு:

வளிமண்டலத்திலுள்ள சில வாயுக்கள் சூரியனின் வெப்பத்தை உறிஞ்சி அப்படியே வைத்துக் கொள்வதால் பூமியின் வெப்பநிலை உயருகிறது. இதற்குக் கண்ணாடி வீடு விளைவு என்று பெயர்.

## வாயுக்கள்:

நீராவி, கார்பன்-டை-ஆக்சைடு, நைட்ரஸ் ஆக்சைடு, மீதேன் போன்றவை கண்ணாடி வீடு வாயுக்கள் ஆகும். மேற்கண்ட வாயுக்கள் அனைத்தும் பூமி திருப்பியனுப்பும் அகச்சிவப்பு கதிர்களை உறிஞ்சிப் பின் பிரதிபலிக்கும். இவ்வாறு செய்வதன் மூலம், இவ்வாயுக்கள் ஒரு கண்ணாடி வீட்டில் கண்ணாடிகள் எவ்வாறு வெப்பத்தைத் தக்கவைத்துக் கொள்கின்றனவோ, அவ்வாறே வெப்பத் தையும் தக்கவைத்து பூமியின் வெப்பத்தைக் கூட்டுகிறது.

பொதுவாக பூமியில் அமைத்து உயிரிகளின் வாழ்வும் இந்தக் கண்ணாடி வீடு விளைவைச் சார்ந்துள்ளது. இவ்விளைவானது இல்லையெனில் பூமி குளிர்ந்து வட துருவத்திலிருந்து தென் துருவம் வரை பூமியைப் பனிக்கட்டிகள் மூடிவிடும்.

## கண்ணாடி வீடு வாயுக்களின் வகைகள்:

சுற்றுப்புறத்தில் 1. இயற்கையாகவோ அல்லது 2.மனிதனின் செயல் பாடுகளாலோ, கண்ணாடி வீடு வாயுக்கள் காணப்படுகின்றன. மிக அதிக அளவில் காணப்படும் கண்ணாடி வீடு வாயு கார்பன்-டை-ஆக்சைடு ஆகும். எரிமலை வெடித்தல், விலங்குகளின் சுவாசித்தல், தாவரங்கள் போன்ற கரிம பொருட்களை எரித்தல் மற்றும் அவை மட்கி அழுகுதல் போன்ற காரணங்களால் கார்பன்-டை-ஆக்சைடு வெளிப்பட்டு வாயு மண்டலத்தை அடைகிறது.

நிலக்கரி, பெட்ரோலிய எரி பொருட்கள், திடக் கழிவுகள், வாகனங்களை ஓட்டுதல், மின்சாரம் தயாரித்தல், மரம் மற்றும் மரப்பொருட்களை எரித்தல் ஆகியவற்றின் காரணமாக, கார்பன்-டை-ஆக்சைடு வாயு அதிகமாக வெளியேற்றப்படுகிறது. அதேசமயம் காடுகள் அழிக்கப்படுவதன் காரணமாக, ஒளிச்சேர்க்கையின் மூலம் மரங்கள் உறிஞ்சிக்கொள்ளும் கார்பன்-டை-ஆக்சைடு அளவு பெரிதும் குறைந்து விட்டது.

## வாயுமண்டலத்தில் கார்பன்-டை-ஆக்சைடு அளவு:

பூமியின் இயற்கையான முறைகள் மூலம் கார்பன்-டை-ஆக்சைடு அகற்றப்படும் வேகத்தை விட மனிதர்கள் செயல்களால் வாயு மண்டலத்தில் சேர்க்கப்படும் கார்பன்-டை-ஆக்சைடு அளவு மிக அதிகம்.

1750-ஆம் ஆண்டில் ஒருமில்லியன் காற்று மூலக்கூறுகளில் (PPM கார்பன்-டை-ஆக்சைடு மூலக்கூறுகள் காணப்பட்டன. ஆனால் இன்று 368 PPM கார்பன்-டை-ஆக்சைடு

மூலக்கூறுகள்உள்ளன. அதாவது 31% அதிகரிப்பு.

மீத்தேன்:

கார்பன்-டை-ஆக்சைடை விட 20 மடங்கு அதிகமாக வெப்பத்தை எடுத்துக் கொள்கிறது. இது நிலக்கரி, இயற்கை வாயு மற்றும் எண்ணெய் ஆகியவை உற்பத்தி செய்யப்படும் போதோ அல்லது இடமாற்றத்தின் போதொ வளிமண்டலத்தில் வெளியேற்றப்டுகிறது.



குப்பைகளில் காணப்படும் கரிம கழிவுகள் அழுகும் போதும் பசுமாடுகள் உணவுப் பொருட்களைச் செரிக்கும் போதும் மீத்தேன் வெளியேற்றப்படுகிறது. மீத்தேன் வாயுவினது வெப்ப அளவு அதிகரிப்பானது 1750-ம் ஆண்டிற்குப் பிறகு இருமடங்கு அதிகரித்தள்ளது.

## நைட்ரஸ் ஆக்சைடு:

கார்பன்-டை-ஆக்சைடைக் காட்டிலும 300 மடங்கு அதிக வெப்பத்தை உறிஞ்சும் புதைபடிவ எரிபொருட்களை எரித்தல், மற்றும் பண்ணை மண்ணை உழுதல் போன்ற நிகழ்வுகள் மூலம் இவ்வாயு வெளியேற்றப்படுகிறது. இதன்அளவு மூன்று மடங்கு அதிகரித்துள்ளது.

அலுமினியத்தை உருக்கும் போது வெளிப்படும் பெர்புளூரினேட் கூட்டுப்பொருள்கள், நுரைமெத்தைகள் தயாரிக்கும் போது உருவாகும் ஹைடிரோகார்பன்கள், குளிர்சாதனப் பெட்டிகளில் பயன்படுத்தப்படும் குளிரூட்டும் பொருட்களான குளோரோ புளூரோ கார்பன் போன்ற மற்ற வாயுக்களும் உலகளாவிய வெப்ப உயர்வுக்குக் காரணமாகும்.

டிரைபுளூரோமிதைல் சல்பர் பென்டா புளூரைட் எனும் ஒரு புதிய வாயுவின் அளவு திடுக்கிடும் அளவிற்கு வாயுமண்டலத்தில் மிக அதிகமாக இருப்பது 2000-ம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த வாயு அரிதான ஒன்றாக இருந்தாலும், இது மற்ற கண்ணாடி வீடு வாயுக்களைவிட மிக அதிக வெப்பத்தை உறிஞ்சும். இதில் கவலைப் படும்படியான செய்தி என்னவென்றால், எவ்வகை தொழிற சாலையிலிருந்து இது வெளிப்படுகிறது என்பது இன்னமும் கண்டுபிடிக்கப் படவில்லை என்பதுதான்.

## உலகலாவிய வெப்ப உயர்வினால் ஏற்படும் விளைவுகள்:

1.கடல்கள் வெப்பமடைவதால், கடல் நீர் மட்டம் உயரும், உறைபனிகள் உருகி மேலும் நீர்மட்டத்தை உயர்த்தும்.

2.சில இடங்களில் பருவக் காலங்களின் அளவு மேலும் நீடிக்கலாம்.

3.வெப்பமான உலகம், பொதுவாக அதிக ஈரப்பதத்தை உண்டாக்கும். அதிக ஈரப்பதம் அதிக மழை பொழிவை ஏற்படுத்தும்.

4.புயல்கள் அதிக வலுப்பெற்றும், அடிக்கடியும் உண்டாகும்.
5.உலகின் சில பகுதிகள் ஏற்கனவே இருப்பதை விட அதிகமாகப் பாலை வனம் போல் ஆகலாம்.
6.பல்வேறு சுழற்சி முறைகளில் காற்றுத் தீவிரமாக வீசம், சூறாவளிகள் மிகவும் கடுமையாக வீசும்.
7.வானிலையை முன்னதாகவே சரியாக கணிக்க முடியாமல் போகம்.
8.தீங்குயிரிப் பூச்சிகளாலும், தாவர நோய்களாலும் பயிர்களும், காடுகளும் பாதிக்கப்படுமட்.
9. சிலவகை காடுகள் மறைந்து போகும்.
10.வெப்பச் சுழற்சியால் அதிக எண்ணிக்கையில் மனிதர்கள் நோய்வாய்ப்படுவர்.
11.மலேரியா, டெங்கு காய்ச்சில், மஞ்சள் காமாலை, மூளைக் காய்ச்சல் போன்ற வெப்ப நாடுகளில் காணப்படும் நோய்கள் உலகின் மற்ற பகுதிகளுக்கும் பரவும்.

## உலகலாவிய வெப்ப உயர்வைக் கட்டுப்படுத்தும் முயற்சிகள்:

உலகலாவிய வெப்ப உயர்வைக் கட்டுப்படுத்த இருவழிகள் உள்ளன. ஒன்று கார்பன்-டை-ஆக்சைடையோ அல்லது கார்பன் பகுதியையோ வேறு எங்காவது சேமித்து வைத்தல். இதற்கு கார்பன் தனிமைப்படுத்துதல் என்று பெயர். மற்றொன்று கண்ணாடி வீடு வாயுக்களின் உற்பத்தியைக் குறைத்தல்.

மேற்கண்ட செயல்முறைகளை நாம் நடைமுறைப்படுத்தி வந்தோமானால், நம்மால் இயன்ற அளவிற்கு இப்பூமியின் வெப்ப உயர்வினைக் கட்டுப்படுத்த முடியும்.

◉

**சி ந் த னை க் க தை**

# ❄ஞானியின் மனம்❄

**தொகுப்பு:**
**முனைவர் த. கண்ணன்**
**தமிழ் விரிவுரையாளர்**

ஒரு ஜென் ஞானி ஒரு கிராமத்தை விட்டு நான்கு மைல்கள் தள்ளி வெளியே உள்ள ஒரு சிறுகுடிசையில் வாழ்ந்து வந்தார்.



ஒரு நாள் இரவு அவர் குடிசைக்குள் ஒரு திருடன் நுழைந்ததை அவர் கண்டார். அவர் மிகுந்த வேதனை அடைந்தார். ஏனெனில் அவருடைய குடிசையில் அந்தத் திருடன் திருட எந்தப் பொருளுமே இல்லை. அந்தத் திருடன் வெகு தூரத்திலிருந்து வந்திருக்கிறான். அவன் வெறும் கைகளுடன் திரும்பிப் போக வேண்டுமே என்று ஞானி அழ ஆரம்பித்துவிட்டார்.

இதைப் பார்த்த திருடன் ஞானியைக் கேட்டான். "ஐயா என்ன நிகழ்ந்து விட்டதென்று இப்படி அழுகின்றீர்கள்? நான் எதையும் எடுத்துக் கொண்டு போய் விடுவேன் என்று வேதனைப் படுகின்றீர்களா?

ஞானி சொன்னார்:

"இல்லை, அப்படி இல்லை. உனக்கு எடுத்துப் போக எதுவுமில்லையே என்றுதான் வருத்தப் படுகின்றேன். நீ இன்னம் சற்று நல்லவனாக இருந்தால் நீ முன்கூட்டியே அறிவித்து விட்டு வந்திருக்கலாமே. நான் ஏதேனும் சில சாமான்களையாவது வாங்கி வைத் திருப்பேன். இப்பொழுது இந்தக் குடிசையில் ஒன்றுமில்லை. நீ என்னைப் பற்றி என்ன நினைப்பாய்? நீ இந்தக் கடும் குளிரில் நான்கு மைல் நடந்து என் குடிசைக்கு வந்தது, நீ எனக்குச் செய்த பெருமையாகும். இது மாதிரி பெருமையை இதுவரை யாரும் கொடுத்ததில்லை. என்னை ஒரு ராஜா போல் ஆக்கினாய். ஆனால் நான் உன் முன்னே ஒரு பிச்சைக் காரனைப் போல் நின்று கொண்டி ருக்கிறேன். என்னிடம் உனக்குக் கொடுப்பதற்கு ஒன்றுமில்லை. அதனால் தான் அழுகின்றேன். இப்பொழுத நான் என்ன செய்வது? நீ என்னுடைய போர்வையை எடுத்துச் செல்லலாம்".



ஞானியிடம் ஒரே ஒரு போர்வைதான் இருந்தது. அதை அவர் போர்த்திக் கொண்டிருந்தார். அந்தப் போர்வையும் இல்லாவிட்டால் அவர் கிட்டதட்ட நிர்வாணமாகத்தான் இருப்பார். மிகக் குளிராக இருந்தது.

அவர் திருடனைப் பார்த்துச் சொன்னார். "தயவு செய்து என் மீது கருணை காட்டு, இந்தப் போர்வையை எடுத்துக் கொள். வேண்டாமென்று சொல்லி விடாதே. ஏனெனில் உனக்கு கொடுக்க வேறொன்றும் இல்லை. ஆகவே இந்தப் போர்வையை எடுத்துக் கொள். வேண்டாமென்று சொல்லி விடாதே. அடுத்த முறை வரும்போது சற்று முன்கூட்டியே சொல்லிவிட்டு வா. நான் மிகவும் ஏழை. இருந்தும் நீ வருவது தெரிந்தால் உனக்காக சில சாமான் களை ஏற்பாடு செய்து வாங்கி வைத்திருப்பேன்".

திருடனுக்கு என்ன நிகழ்கிறது என்றே தெரியவில்லை. ஞானி அழுவதைப் பார்த்து அவர் மீது இரக்கம் கொண்டான். அவனால் போர்வையை வேண்டாம் என்று சொல்லி மறுக்க முடியவில்லை. அவன் போர்வையை வாங்கிக் கொண்டு மறைந்து விட்டான். அந்த இரவு இந்த ஜென் ஞானி ஒரு சிறிய ஹைகூ கவிதை ஒன்று எழுதினார். அவர் தன் குடிலின் ஜன்னலருகே உட்கார்ந்து கொண்டு வெளியே வானில் தெரியும் முழு நிலைவைப் பார்த்துக் கொண்டு அவர் கவிதை எழுதினார்.

"ஏ கடவுளே, நான் இந்த நிலவை அந்தத் திருடனுக்குக் கொடுக்க முடியுமேயானால்...." இதுதான் ஞானி யின் மனம்.

அதாவது மனமற்ற மனம். இதே ஞானியின் குடிசைக்கு மீண்டும் ஒரு நாள் ஒரு திருடன் வந்தான். அப்பொழுது ஞானி ஒரு கடிதம் எழுதிக் கொண்டிருந்தார். அவர் திருடனைப் பார்த்துக் கேட்டார். "எதற்காக இங்கே வந்தாய்? உனக்கு என்ன வேண்டும்?

ஞானி அவ்வளவு கள்ளங் கபடமற்றவராக இருப்பதைப்பார்த்த திருடனுக்குப் பொய் சொல்ல மனம் வரவில்லை. அவன் சொன்னான், "குழந்தையைப் போன்ற உங்களை, கள்ளங்கபட மற்ற உங்களைப் பார்த்ததும் என்னால் பொய் சொல்ல முடியவில்லை. நான் உண்மையைச் சொல்லட்டுமா?"

ஞானி சொன்னார்: "ஆம் உண்மையைச் சொல்."

திருடன் சொன்னான்: "நான் இங்கு திருட வந்திருக்கிறேன்"

ஞானி சொன்னார்: "அந்த மூலையில் சென்று பார் அங்கு சில ரூபாய்கள் வைத்திருக்கிறேன். நீ அதனை எடுத்துக் கொள்" என்று சொல்லிவிட்டு அவர் மீண்டும் கடிதம் எழுது வதைத் தொடர்ந்தார்.



திருடன் அங்கிருந்த பணத்தை எடுத்துக் கொண்டு வீட்டை விட்டுப் போக முற்பட்டான்.

ஞானி சொன்னார். நில், யாராவது உனக்கு எதையாவது கொடுத்தால் அதற்கு நீ அவருக்கு நன்றி சொல்ல வேண்டும். இந்தப் பணம் உனக்கு அவ்வளவு பெரிய உதவியாக இல்லாமலிருந்தாலும், நீ நன்றி சொல்வது உனக்கு வெகுதூரத்திற்குப் பெரிய உதவியாக இருக்கும். ஆகவே, நீ எனக்கு நன்றி சொல்".

திருடனும் நன்றி கூறிவிட்டு இருளில் மறைந்து போய்விட்டான்.

சற்று நாள் கழித்து அந்தத் திருடன் பிடிபட்டு விட்டான். அவனை விசாரித்ததில் அவன் இந்த ஞானியின் குடிசைக்கும் போயிருந்தது தெரிய வந்தது. ஆகவே இந்த ஞானியை நீதிமன்றத்துக்கு வரச் சொன்னார்கள். ஞானி நீதி மன்றத்தில,

"எனக்கு இந்த மனிதரை நன்றாகத் தெரியும். ஆனால் இவர் என்னிடமிருந்து எதையும் திருடிக் கொண்டு போகவில்லை. நான் சில ரூபாய்களைக் கொடுத்தேன். அவர் எனக்கு அதற்காக நன்றியும் சொன்றார். அது முடிந்து விட்டது. இதில் தவறு ஏதும் இல்லை. கணக்கு முடிந்து விட்டது. நான் அவருக்குச் சில ரூபாய்கள் கொடுத்தேன். அதற்காக அவர் எனக்கு நன்றி சொல்லிவிட்டார். அவர் ஒரு திருடனில்லை" என்று கூறினார்

இந்த ஞானியின் மனம் மனமற்ற மனமாகும்.

◉

கட்டுரை

# மக்கள் தலைவர் கே.எஸ்.ஆர்.

**திரு. மோ. ஆ. யுவராசா**
**தமிழ்ப் பேராசிரியர்**
**கே.எஸ்.ஆர். கல்வியியல் கல்லூரி**

உலகோர் உன்னத நிலையை அடைய வேண்டும் என்ற கனவுக்கும் நினைவுக்கும் சொந்தக்காரரான ஐயா கே.எஸ்.ஆர். அவர்கள் கொங்கு நாட்டுச் சாதனையாளர்களுள் குறிப்பிடத்தக்க வராவார். அறிவுச் செல்வத்தை அனைவரும் அளவில்லாது பெற வேண்டும் என்ற அவாவிற்குச் சொந்தக்காரர். உலகத்தரமான கல்வியால் உயர்தரச் சான்றோர்களை, பொறியாளர்களை, மருத்துவர்களை, விஞ்ஞானிகளை, கலை ஞர்களை உருவாக்கிவரும் உத்தமபுருஷர். ஐயா கே.எஸ்.ஆர். அவர்களின் கட்டடங்கள் அவரது மேன்மையைக் காட்டு கின்ற முத்திரைகளாகும். கடுமையான உழைப்பு, பிறருக்காகப் பாடுபடும் பண்பு, பிறர் உயர்வு கண்டு உவக்கும் உயரிய இதயம் இவைதான் கே.எஸ்.ஆர். என்பதன் பொருளாகும். “அரிஸ்டாட்டில் வாழும் காலத்தில் என்மகனும் வாழ்கிறான்” என்று அலெக்ஸ்சாண்டரின் தந்தை பெருமைப் பட்டது போல, ஐயா அவர்கள் வாழும் காலத்தில் நாமும் வாழ்கிறோம் என்று பெருமைப்படுகிறோம்.

பல கல்விக்கூடம் பிறப்பதற்கும் கல்வியில் விழிப்புணர்வு பிறப்பதற்கும் அடித்தளமாய்த் திகழ்ந்து வரும் ஐயா அவர்களைக் கல்வி உலகின் கலங்கரை விளக்கம், கல்வித்தந்தை என்று வரலாறு கூறும். ஒவ்வொரு துறையிலும் வெற்றிக் கோப்பையைத் தட்டிவரும் இவரை உலகம் சாதனை நாயகர், சரித்திரநாயகர் எனப் புகழ்ந்து பாடும். கல்வித் துறையிலும், தொழிற் துறையிலும், நெசவுத் துறையிலும் பொதுப்பணியிலும், ஆன்மீகப் பணியிலும் உலகிற்கே வழிகாட்டியாகத் திகழும் இவரை நாடும் ஏடும், பொதுநலப் பூங்கா, நட்புச் செல்வர், மனித நேயர் எனப் பல்வேறு பட்டங்கள் தந்து பெருமைப் படுத்துகின்றன.

பிளாரன்ஸ் நகரம் ஒரு காலத்தில் இருள் சூழ்ந்து இருந்தது. நகரிற்கு தாந்தே என்பவர் வருகிறார். தன் மாளாத உழைப்பாலே அந்நகரை மாநகரம் ஆக்கினார் என மேனாட்டு வரலாறுகள் கூறுகின்றன. அதேபோல, கருவேப்பம்பட்டி என்ற சிறிய கிராமத்திலிருந்து கே.எஸ்.ஆர். அவர்கள் திருச்செங் கோட்டிற்கு வருகிறார். தனது மாளாத உழைப்பாலே திருச்செங்கோட்டை ஒரு மாநகராக மாற்றி வருகிறார். திருச்செங்கோடு மாநகரம் இன்று ஒருகல்வி நகரமாக, கலைநகரமாக, ஆலைகள் நிரம்பிய தொழில் நகரமாக, ஆன்மீக நகரமாக ஆழ்துளை கிணறுகளை உருவாக்கும் (Borewell) இயந்திரங் களின் தலைமையிடமாக, பசுமைப்புரட்சி வெண்மைப்புரட்சி (கோழிப்பண்ணை)

களுக்கு வித்திட்ட விளைநிலமாக மாற்றிய கே.எஸ்.ஆர். அவர்கள் தனி ஒரு மனிதராக நின்று செய்த சாதனைகளைத் தொகுப்பின் எஞ்சும், விரிப்பின் அகலும்.

## கல்விச் சேவை

அன்னசத்திரம் ஆயிரம் வைத்தலைவிட ஏழைக்கு எழுத்தறிவித்தல் அன்னயாவினும் புண்ணியங்கோடிஎன்றார் பாரதி. நடுங்கிய மயிலுக்குப் போர்வையைக் கொடுத்தான் பேகன் என்று இலக்கியங்கள் பாராட்டுகின்றன. கே.எஸ்.ஆர். அவர்கள் அறியாமைக்குளிரில் நடுங்கிக் கொண்டிக்கின்ற தமிழகத்து குழந்தை களுக்கு மட்டுமல்ல, இந்த தரணியில் வாழும் ஆயிரம் ஆயிரம் குழந்தைகட்கும் அறிவுப் போர்வையை வழங்கிக் கொண்டிருக்கிறார். இன்று இருபத்தைந் தாயிரம் மாணவ, மாணவிகள் கே.எஸ்.ஆர். உருவாக்கிய கல்வி நிறுவனங்களில் பயின்று கொண்டிருக்கின்றனர். இந்திய நாட்டு மாணவ மாணவியர்களும் கல்வி ஒளி பெற கே.எஸ்.ஆர். அவர் பெரிதும் உதவி புரிகின்றார். அனைத்து மாணவ, மாணவியர்களும் பயன்பெறும் வகையில் இலவச பேருந்து வசதிகளை அளித்துள்ளார்.

சமுதாயத்தால் பிற்படுத்தப்பட்ட ஏழை, எளிய மாணவ, மாணவியருக்கும், கே.எஸ்.ஆர் அறக்கட்டளை சார்பாக ஆண்டுதோறும் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதனால் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர்கள் கல்வித்துறையில் முன்னிலை பெற கே.எஸ்.ஆர். அவர்கள் பெரிதும் தூண்டுதலாக விளங்குகிறார். கொங்குநாடு இன்று கலைமகள் தங்கும் நாடாக மாற்றிய பெருமை கே.எஸ்.ஆர். அவர்களையே சாரும்.

நாட்டின் முன்னேற்றத்திற்குத் தடைக் கல்லாய்த் திகழ்வது கல்லாமை. இக்கல்லாமையை, அறியாமையைப் போக்கிய போர்வீரனாக கே.எஸ்.ஆர். விளங்குகிறார். இளம் பருவத்தில் படிக்க வாய்ப்பு இழந்த முதியோர்க்கும், 14 வயதிற்கு மேற்பட்ட இளையோர்க் கும் தம் நிறுவனத்தில் பயின்று வரும் என்.எஸ்.எஸ், ஸகௌட், யு.ஆர்.சி, ஆர்.ஆர்.சி முதலிய பிரிவுகளைச் சார்ந்த மாணவ, மாணவிகளைக் கொண்டு முதியோர் கல்வி (இரவுப்பள்ளி) போதித்து வருகிறார்.

இவைமட்டுமல்ல சமுதாயத்தில் பின்தங்கியுள்ள ஏழை, எளிய பெண்மணி களுக்குத் தொழிற்பயிற்சி தையல் பயிற்சி, பூவேலைப் பின்னல், பொம்மைகள் தயாரித்தல், சோப்பு, சாம்பு, பினாயில், தயாரிக்கும் பயிற்சி போன்றவற்றைத் தருகிறார். கணினி யுகத்திற்கு ஏற்ற வகையில் இளைஞர்களுக்குக் கணினிப் பயிற்சி தருகிறார். இதன் மூலம் படித்த, படிக்காத ஆண், பெண் இருபாலர்களும் சுயதொழில் செய்யும் வாய்ப்பை உருவாக்கி அவர்களது வாழ்வில் ஒளியூட்டி வருகிறார். பாழ்பட்ட பலரது வாழ்க்கை இன்று பளிங்கு மாளிகை போல் திகழ்வதற்கு அடித்தளமாய் விளங்கியவர் கே.எஸ்.ஆர். என்றால் அது மிகையாகாது.

## மருத்துவ சேவை

மக்களுக்கு இலவச மருத்துவ சேவை செய்வதற்காகவே பல்மருத்துவக் கல்லூரி ஒன்றை நிறுவி உள்ளார். இம்மருத்துவக் கல்லூரியில் உள்ள மருத்துவப் பேராசிரியர்களைக் கொண்டு

இலவச பல் மற்றும் பொது மருத்துவ சேவைகள் நாள்தோறும் நடைபெற்று வருகின்றன. இதனால் இலட்சக் கணக்கான பொதுமக்கள் பயன் பெற்றுள்ளனர். மருத்துவக் கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவியர் உதவியோடு தமிழகத்தின் பல்வேறு கிராமங்களில் இலவச மருத்துவ சேவை செய்யப்பட்டு வருகின்றன. மருத்துவ விழிப்புணர்வு முகாம்கள் பல நடத்தப்பட்டு வருகின்றன. எய்ட்ஸ் விழிப்புணர்வு, பன்றிக் காய்ச்சல், பறவைக் காய்ச்சல், காலரா, மலேரியா, டைபாய்டு, டிபி முதலான நோய்களைப் பற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்தி வருகின்றனர். கோகுலம் மருத்துவமனை மூலம் பல்வேறு வகையான நோய்கட்கும் சிறப்பான மருத்துவ வசதிகளை உருவாக்கிச் செகம் போற்ற மருத்துவ சேவை சேலத்தில் செய்து வருகிறார் மருத்துவச் செம்மல் கே.எஸ்.ஆர். அவர்கள்.

## சமுதாய வானொலி (90.4 அலைவரிசை)

கே.எஸ்.ஆர். தன் நிறுவனத்தின் சார்பாக மக்கள் பயனடையும் வகையில் ஒரு சமுதாய வானொலி நிலையம் அமைத்துள்ளார். இதன் மூலம் கல்வித் துறையில் புதிய தொழில் நுட்பங்கள், விவசாயம் சார்பான புதிய தொழில் நுட்பங்கள், சொட்டு நீர்ப் பாசனம், நீர் மேலாண்மை, காய்கறி விலை நிலவரம், சமூகநீதி, மகளிர் மேம்பாடு, தொழில் துறையில் புதிய தொழில் நுட்பங்கள் நெசவு, சார்பான புதிய தொழில் நுட்பங்கள், நோய்கள் பற்றிய விழிப்புணர்வு கள், வேலைவாய்ப்பு பற்றிய செய்திகள், பண்பாடு, ஒழுக்கம், கலை, கலாச்சார நிகழ்ச்சிகள், யோகா மற்றும் உடல்சார்பான பயிற்சிகள் நோய்தடுப்பு முறைகள், கல்வி உதவித்தொகை வங்கியில் பெறுவதற்கான வழிவகைகள் பெரியோர்களது சிந்தனைகள், இலக்கிய நிகழ்ச்சிகள், முதியோர் கல்வி முதலான பல்வேறு துறைச் செய்திகள் நாள்தோறும் மக்கள் பயனடையும் வகையில் ஒலிபரப்பாகி வருகின்றன. இதனால் கொங்குச் சீமையே வளம் பொங்கும் சீமையாக மாறி வருகிறது என்றால் அதற்கு எல்லாம் கே.எஸ்.ஆர். என்ற தனிநபரே காரணம் என்று கூறலாம். ***(தொடரும்)***

◉

**தெரிந்த முகம், தெரியாத செய்திகள்**

## ❄ பிளெமிங் ❄



துப்பறியும் நாவலை எழுதிய எழுத்தாளர் பிளெமிங் இங்கிலாந்து அரசின் துப்பறியும் துறையில் பொறுப்பு மிக்க பதவி வகித்தவர்.

ஜேம்ஸ்பாண்ட் என்னும் கற்பனைத் துப்பறியும் கதாபாத்திரத்தைக் கொண்டு உருவாகும் இவரது ஒவ்வொரு கதையும் பிரிட்டிஸ் இரகசியத் துறையில் புத்தகமாக வெளியிடுவதற்கு முன்பு ஒரு முறை படித்துப் பார்ப்பார்களாம். துப்பறியும் துறையில் அத்துணை நுட்பமான யூகங்களைக் கொண்டதாக இருக்கும் அவரது கற்பனை.

**தொகுப்பு: வி. புருஷோத்தமன்**
இளங்கலை கணினி அறிவியல் துறை
இரண்டாமாண்டு 'ஆ' பிரிவு

◉

**தொடர் செய்யுள் : பகுதி - 03**

## ❄ கே.எஸ்.ஆர். பிள்ளைத் தமிழ் ❄



### 3. தாலப் பருவம்

பிள்ளைத் தமிழின் மூன்றாம் பருவம் தாலப்பருவம் ஆகும். தால் என்பதற்கு நாக்கு என்று பொருள். தாய் தன்னுடைய தால் அசைத்து (நாவை அசைத்து) குழந்தையின் (கே.எஸ்.ஆர். ஆகிய) சிறப்புகளைப் (கே.எஸ்.ஆர். ஆகிய) பாடும் பருவம் இது. குழந்தையின் 8-ஆம் திங்களில் இந்நிகழ்ச்சி நிகழும்.

கற்பகம் எனவரும் கணபதியைக்
கனவிலும் நனவிலும் தொழுதேத்தி
கடமையைச் செய்யும் கலைச்செல்வா!
கல்விக் குரிசிலே! தாலேலோ!
நற்பதம் நல்கும் வேல்முருகன்
நல்லருள் தன்னை தினம்வேண்டி
நல்லன எல்லாம் செய்கின்ற
நற்றவ நாயகா! தாலேலோ!
அற்புதம் நிகழ்த்தும் செங்கோட்டின்
அர்த்த நாரியை அடிபணிந்தே
அணையாக் கல்விச் சுடர்விளக்கை
அவனிக் களித்தவா தாலேலோ!

பொற்புறு தந்தை சென்னிமலை
புகழ்பச்சி யம்மையின் திருமகனே!
பொன்சேர் அரங்கா! தாலேலோ!
புவிமகிழ் செல்வா ! தாலேலோ!
பிறப்பால் கிடைப்பது தாயின்பால்
பண்பால் கிடைப்பது பாசப்பால்
பெண்பால் கிடைப்பது இன்பப்பால்
பிணைப்பால் கிடைப்பது நட்புப்பால்
படிப்பால் கிடைப்பது கல்விப்பால்
மலர்பால் கிடைப்பது தேனின்பால்
இறைப்பால் கிடைப்பது அருளின்பால்
இசைப்பால் கிடைப்பது பண்ணின்பால்
இனிப்பால் கிடைப்பது சுவையின்பால்
இப்பால் அப்பால் இருக்கும்பால்
எழில்பால் தொழில் திகழ்பொருட்பால்
எல்லாம் வந்தது உன்உழைப்பால்
சிறப்பால் வந்தது உன்புகழ்பால்
சிரிப்பால் வந்தது உன்துணைப்பால்
சினப்பால் சென்றது எல்லையின்பால்
சேர்ப்பால் திரியாத நின்குணப்பால்
சேர்ந்திட சேர்ந்திட நின்தரப்பால்
சேர்ந்தே உயர்ந்தது உச்சியின்பால்
அறப்பால் பொருட்பால் இன்பப்பால்
அனைத்தையும் நம்பால்
கொணர்ந்திடும்பால்
அப்பால் குடித்திடும் அருட்குழந்தாய்!
அன்பா! தாலே! தாலேலோ!
அறிவா! தலைவா! அறம்வளர்க்கும்
அரங்கா ! தாலே ! தாலேலோ!

*திரு. மோ. ஆ. யுவராசா,*
தமிழ்ப்பேராசிரியர்,
கே.எஸ்.ஆர். கல்வியியல் கல்லூரி.

◉